**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No.147/2018 தேதி- 20.11.2025
(D.W.1) - ஜாண்றோஸ்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் போது 21.01.2019 -ல் 20 அடி ஆட்களுடன் சேர்ந்து அடைக்க முயற்சி செய்தேன் என்றால் அது என்னுடைய சொத்தாகும், மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் உத்தரவு பெற்று அதன் பின்பு தான் அடைக்க முயற்சி செய்தேன். மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் வழங்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் தான் வழிப்பாதையை அடைத்தாக சொல்லியுள்ள நிலையில் அதற்கான உத்தரவு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்சொன்ன மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் ஊர் மக்களை இந்த வழக்கின் வாதியையோ, ஊர் மக்களையோ கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. மேற்சொன்ன மனுவில் தக்கலை ஆய்வாளர் என் வீட்டிற்கு மதில் சுவர் அமைக்கும் போது பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று தான் பரிகாரம் கேட்டு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்சொன்ன உத்தரவின் அடிப்படையில் தக்கலை காவல் நிலைய ஆய்வாளரிடம் மனு அளித்தேன் என்றால் சரிதான். மேற்சொன்ன மனுவின் அடிப்படையில் தக்கலை காவல் ஆய்வாளர் மற்றும் சார் ஆட்சியர் பத்மனாபபுரம் ஆகியோர்கள் என்னுடைய சொத்தை பார்வையிட்டார்கள் என்றால் சரிதான். ஆனால் எனக்கு போலீஸ் பாதுகாப்பு தரவில்லை என்றால் போலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

2. அவ்வாறு போலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்ட நிலையில் தக்கலை காவல் ஆய்வாளர் மீது ஏன் நீதிமன்ற அவமதிப்பு மனு தாக்கல் செய்தேன் என்றால் மறுநாள் சுவற்றை இடித்துவிட்டதால் தக்கலை காவல் ஆய்வாளர் மீது மனு தாக்கல் செய்தேன். மேற்சொன்ன ஆய்வின் போது தக்கலை காவல் ஆய்வாளர், RDO ஆகியோர்கள் என் சொத்தை பார்வையிட்டு என்னுடைய எதிர்க்கோரிக்கை மனுவில் சொல்லப்பட்டுள்ள பட்டிகை சொத்தின் அடிப்படையில் அவ்விடத்தில் சொத்து இல்லாததால் நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற முடியாமல் திரும்பி சென்றார்கள் என்றால் சரியல்ல, மதில் சுவர் கட்டப்பட்டது. தக்கலை காவல் ஆய்வாளர் மீது Contempt petition No.MD.531/2019 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்சொன்ன மனு மீது தக்கலை காவல் ஆய்வாளர் நேரில் நீதிமன்றத்தின் முன் ஆஜராகி வழிப்பாதையும் சேர்த்துள்ளதால்

உத்தரவை நிறைவேற்ற முடியவில்லை என்று முறையிட்டார் என்றால் அதுபற்றி தெரியாது. மேற்சொன்ன தக்கலை காவல் ஆய்வாளரரின் முறையீட்டுக்கு பிறகு என் தரபப்பு வழக்கறிஞர் நீதிமன்ற அவமதிப்பு மனுவை திரும்ப பெற்றுக்கொண்டார் என்றால் அதுபற்றி தெரியாது.

3. எனவே நான் மதில் சுவர் அமைத்ததாக சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மதில் சுவர் அமைக்க 21.01.2019 அன்று முயற்சி செய்தேன் என்றாலும் அது வழக்கு நிலுவையில் இருந்த சமயம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்த ஆண்டு தெரியுமா என்றால் தெரியாது. 21.01.2019 அன்று இந்த வழக்கின் வாதியை நானும், என் அடி ஆட்களும் சேர்ந்து அடித்து மெயின் ரோட்டில் தூக்கிபோட்டோம் என்றால் சரியல்ல. மேற்சொன்ன சம்மவத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தற்போதும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். தக்கலை காவல் ஆய்வாளர் வாதி மீதும் மற்றும் ஊர் பொதுமக்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்று குற்றவியல் நீதிமன்ற எண்.1 -ல் 5 மனுக்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை 2 மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்சொன்ன 2 மனுக்களும் முடிக்கப்பட்டதா என்றால் இல்லை. மேற்சொன்ன மனு மற்றும் அதன் மீது வழங்கப்பட்ட உத்தரவு நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். மேற்சொன்ன மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டு தற்போது தக்கலை கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

4. மேற்சொன்ன மனுவில் எத்தனை நபர்கள் மீது மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 8 நபர்களாகும். அவர்களின் பெயர்களை என்ன என்றால் விஜயகுமார், சுமன், சீலன், ஜீவராஜன், குளோரிபாய், கீதா மீது நான் மனு தாக்கல் செய்துள்ளேன். மற்ற 2 நபர்கள் பெயர்கள் நினைவில்லை. என் மீது 100 க்கு மேற்பட்ட ஊர் பொது மக்கள் நிறைய புகார் அளித்துள்ளார்கள் என்றால் சரிதான், என்னுடைய சொத்தை அபகரிக்க முயற்சி செய்கிறார்கள். நான் பொது வழிப்பாதையை ஆக்கிரமிக்க முயற்சி செய்வதால் ஊர் பொது மக்கள் மீது மனுக்கள் தாக்கல் செய்து கஷ்ட, நஷ்டபடுத்துகிறேன் என்றால் சரியல்ல. தக்கலை ஊழல் ஒழிப்பு மற்றும் தகவல் அறியும் உரிமை சட்டம் என்று ஒரு அமைப்பில் நான் ஒரு உறுப்பினராக உள்ளேன் என்றால் சரிதான். அந்த அமைப்பின் தலைவர் யார் என்றால் பால்ராஜ் ஆகும். மேற்சொன்ன குற்றவியல் நீதிமன்றம் எண்.1 -ல் தாக்கல் செய்யப்பட்ட எல்லா மனுக்களிலும் என் தரப்பு சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்சொன்ன அமைப்பின் உதவியுடன் தான்

ஊர் பொதுமக்கள் மீது பொய் புகார் அனுப்ப நடவடிக்கை எடுத்தேன் என்றால் சரியல்ல. 50 ஆண்டுகளுக்கு மேல் பொது வழிப்பாதையாக மக்கள் பயன்படுத்தி வந்த பாதையை அபகரிக்கவேண்டும் என்று ஊர் மக்களையும் வாதியயும் கஷ்ட, நஷ்டபடுத்த வேண்டும் மனுக்கள் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு செலவு தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. நான் திருமணமாகாமல் இருப்பதால் என்னை கஷ்ட, நஷ்டபடுத்தவேண்டும் என்று என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.